காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை

புதிய அமைச்சரவை

காஞ்சி
வாசகர்களுக்கு
பேரறிஞர் அண்ணா அவர்கள் இதுவரை எழுதிய கதைகள் கட்டுரைகள் அனைத்தும் 16–3–69 முதல் "காஞ்சி" இதழில் தொடர்ந்து வெளியிடப்படவிருக்கின்றன.
16-3-69 இதழில்! பேரறிஞர் அண்ணா அவர்கள், கழகச் செயல் வீரர் ஒருவரது மறைவு குறித்து எழுதிய
'வேதனை வெள்ளம்'
என்ற தம்பிக்கு மடல் வெளிவருகிறது!
விற்பனையாளர்கள் தங்கள் தேவைக்கு முன்னதாகவே தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
உரிமையாளர்.
"காஞ்சி"
காஞ்சிபுரம்–3
பாடசாலை

காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 5 | 2—3—69 | இதழ் 33

வரவேற்று - வாழ்த்துகிறோம்!

தமிழ் நாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்களது மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் இரண்டாவது அமைச்சரவை மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்களை முதலமைச்சராகக் கொண்டு செயல்படத் தொடங்கி இருக்கிறது.

அதுபோலவே, அண்ணாவின் அமைச்சரவையில் சட்டமன்றத் தலைவராகவிருந்த சி. பா. ஆதித்தன் அவர்கள், பதவி விலகியதால் ஏற்பட்ட தலைவர் பதவிக்கு, இதுவரையில் துணை சபாநாயகராக விருந்த புலவர் கா. கோவிந்தன் அவர்களும், துணைத் தலைவர் பதவிக்கு எட்மண்டு அவர்களும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப் பட்டவுடனேயே' ஒரு புதிய மரபையும் தோற்றுவித்து அனைவருடைய பாராட்டுக்கும் பாத்திரமாகி இருக்கிறார். இதுவரையில் தலைவர் வருகையை ஆங்கிலத்திலேதான் அறிவிப்பது வழக்கமாக இருந்து வந்தது. அந்த மரபை மாற்றி, வருகையைத் தமிழில் அறிவிக்கும் மரபை உண்டாக்கி இருக்கிறார்.

புதிய தலைவர் அவர்கள், தமிழில் நல்ல புலமை படைத்தவர் என்பதற்கு ஆதாரங்கள் தேடிக்கொண்டிருக்க வேண்டிய அவசியமேதுமில்லை. தாம் புலவர் என்பதனை பெயருடனேயே பல்கலைக் கழகப் பட்டமாகச் சூடிக்கொண்டிருக்கிறார். அதோடு இதுவரையில் அவர், தமிழ் நாட்டுக்கு 50-க்கு மேற்பட்ட நூல்கள் யாத்துத் தந்திருக்கிறார். அவை ஒவ்வொன்றும், அவருடைய தமிழாற்றலை, அறிவாற்றலை, பண்பாற்றலை பறைசாற்றப் போதுமானதாகும். அனைத்துக்கும் சிகரமாக கால்டு வெல் என்பாரது ஒப்பிலக்கணத்தைத் தமிழில் மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார். தமிழன்னைப் புலவர் அவர்கள் சூட்டி இருக்கும் வைரமாலை அது.

இவரது தலைமை சட்ட மன்றத்துக்குக் கிடைத்திருக்கிறது என்பது பெருமைக்குரிய ஒரு செய்தியேயாகும்.

இதுபோலவே துணைத் தலைவர், எட்மண்டு பெர்ணாண்டோவும், பாளையங்கோட்டை நகராட்சி உறுப்பினராக விருந்து போதிய அவை இலக்கணம் அறிந்துள்ள அனுபவஸ்தர்,

இருவரது பதவி நியமனமும் எத்தகைய போட்டியும் இல்லாமல் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பது, முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களது அரசியல் வித்தகமேயாகும்.

முதலமைச்சர் க நிதி அவர்கள் அவை இலக்கணம் பேணுவதில் அவருக்கு நிகர் அவரே என்ற பெருமைக்குரியவர்.

பேரறிஞர் அண்ணா அவர்களது மறைவு மூலம் நாம் இழந்துவிட்டவைகளை இனி மாண்புமிகு முதலமைச்சர் வாயிலாகவே ஈடு செய்துகொள்ள வேண்டும்.

சரியான ஈடாகக்கூடியவர் அவர் என்பதில் சட்டமன்றமும் சரியாகவே செயல்பட்டிருக்கிறது.

புதியவர்கள் அனைவரும் தம்பொறுப்புக்களை நனகு உணர்ந்தவர்களே யாவர். தமிழகத்தின் புகழ் மேலும் மேலும் குவியத் தக்க அளவுக்கு அவர்கள் நிச்சயம் எடுத்துக்காட்டாக இருப்பர் என்று தாராளமாக நம்பலாம்!

அந்த நம்பிக்கையுடனேயே அமைச்சரவையினரையும், சட்டமன்றத் தலைவர், துணைத் தலைவர் அவர்களையும் பாராட்டி வருக! வருக!! வென வரவேற்று, வாழ்த்துகிறோம்!

உணவு நெருக்கடி!

பருவமழை பொய்த்துப்போனதன் காரணமாக தமிழ்நாட்டில் கடுமையான உணவுப் பற்றாக்குறை நிலையைச் சந்தித்துத் தீரவேண்டிய நெருக்கடி ஏற்படவிருப்பதாக நிதியமைச்சர் மதியழகன் அவர்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள்.

இப்படி ஒரு பற்றாக்குறை நிலை ஏற்படக்கூடும் என்பது முன்கூட்டியே எதிர்பார்க்கப்பட்டதுதான். என்றாலும், தமிழகஅரசு, தன்கையிருப்புக் குன்றுவதற்குள்ளாக ஓரளவு சமாளிக்கத்தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கலாம். முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே டில்லியிடமிருந்து ஒரு லட்சம் டன் அரிசி வேண்டுமென்று தன் வேண்டுகோளை வெளியிட்டிருக்கிறார்.

கொள்முதல் விவகாரங்கள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. கொள்முதல் என்கிறபோது மற்றொன்றும் நினைவுக்கு வருகிறது. அரசாங்கத்தால் நியமிக்கப்பெற்ற பல ஏஜெண்டுகள், தாங்கள் கொள்முதல் செய்த நெல்லை, வெளிமார்க்கெட்டில் அரசாங்க அனுமதியின்றி விற்பனை செய்து வருவதாக ஒரு வதந்தி வந்துகொண்டிருக்கிறது. அதிகாரிகளும் இது விஷயத்தில் நீக்குப் போக்குடன் நடந்துகொள்வதாகவும் பேசிக் கொள்ளப்படுகிறது. அரசாங்கம் இது விஷயத்தில் தீவிர நடவடிக்கை எடுத்துத் தீரவேண்டும்.

இவை எல்லாவற்றுக்கும்மேலாக உணவு உற்பத்தியாளர்கள் தம் முழு ஒத்துழைப்பினையும் தந்தால்தான் நெருக்கடியிலிருந்து ஓரளவாவது மீள முடியும்.

அதே வேளையில் இதுபோன்ற ஒரு நெருக்கடியை சந்தித்துள்ள பிரதான எதிர்க்கட்சியான காங்கிரசும், தன் அனுபவத்தை அரசுக்குந் தந்து நாட்டு மக்களது வயிற்றுப் பிரச்னை என்ற வகையில் நன்கு வழிகாட்ட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்! அதே போது இந்த 'வயிற்றுப் பிரச்னை'யில் கம்யூனிஸ்டுகள் எந்த "அரசியல்" லாபமும் தேடாமலிருக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறோம்.

"கண்ணிலே விற்றுச் சித்திரம் வாங்கிடில் கை கொட்டிச்சிரி யாரோ" என்பது தமிழ்ப்பாடல்! கண் இருந்தால்தானே வாங்கிய சித்திரத்தை ரசித்து மகிழ முடியும்? அது போல்தான் விழி நிகர்த்தது மொழி என்பார்கள். மொழியழிந்தால் விழியழியும் என்பதுதான் இதன் பொருள். இதற்காகவே இந்திய அரசு, இந்தி மொழியை, தன்னால் இயன்ற அளவுக்கு இயன்ற துறைகளில் அனைத்தும் முனைந்து புகுத்திக் கொண்டு வருகிறது—ஒருமைப்பாடு என்பதன் பேரால்! ஒன்றன் அழிவிலேதான் மற்றொன்றின் ஆக்கம் என்பது விஞ்ஞானதத்துவம், ஒரு மொழி அழிக்கப்பட்டால்தான் இன்னொன்றை வாழச் செய்ய முடியும். இந்தக் குறிக்கோளிலேயே இந்திக்கு மகுடம் சூட்டப்பட்டது. ஆனால் என்ன காரணத்தாலோ தெரியவில்லை. கடந்த ஆண்டில், தமிழ் நாட்டில் உள்ள மத்திய அரசின் பள்ளிகளில் ஆங்கிலம் நீக்கப்பட்டு இந்தி மட்டுமே இடம் பற்றும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. நல்ல வேளையாக இப்போது அந்த திட்டம் கைவிடப்பட்டு விட்டதாகவும், இனி ஆங்கிலமும் தொடர்ந்து இருக்கும் என்றும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள் பாராளுமன்றத்தில்! ஒரு 'வாழ்க!' போட்டு வைக்கலாமில்லையா!

• • •

கேட்டீரா/ சேதி!

மைசூர்—மகாராட்டிர மாநில எல்லைத் தகராறு ஒன்றைக்காரணம் காட்டி வன்செயல்களில் இறங்கிய சிவாஜி சேனையினர், இப்போது தாக்குதல் நடத்திய இடங்களில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டிருக்கிறார்களாம்! தாக்கப்பட்டவர்களுக்கு மருத்துவச் சிகிச்சையளிப்பது—பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவி தருவது—நிதி திரட்டுவது—நிவாரணம் தேடுவது முதலான காரியங்களில் ஈடுபட்டிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது, கொலை செய்துபோட்டவன் துக்கம் விசாரிக்க வந்த கதையைப்போல இருக்கிறதல்லவா! யார் ஒருவரால் தாக்குதலுக்காளானார்களோ, அவர்களே நிதி திரட்டி நிவாரணப் பணியில் ஈடுபடுவது சட்டப்படி தவறு இல்லையென்றும் மகாராட்டிர போலீஸ் அறிக்கை ஒன்றும் தெளிவுபடுத்திக் காட்டி இருக்கிறது! எப்படியானாலும் சிவாஜிசேனை, அழிவுக்கும் ஆக்கத்துக்கும் முன்னிற்கிறது என்று பதிவு செய்துகொண்டுவிட்டது! இல்லையென்றால் அதன் பிரச்னைகள் இப்படி அனைத்திந்திய விவகாரமாகக் காட்சி தருமா என்ன?

• • •

பாகிஸ்தானில் கடந்த இரண்டு மாதங்களாக நடைபெற்றுக்கொண்டு வரும் அமளி துமளிகள், எதிர்காலத்தில் பாகிஸ்தானை மட்டுமல்ல—இந்தியாவையும் கவலைக்குள்ளாக்கக் கூடியனவாக இருந்துகொண்டிருக்கின்றன, பாகிஸ்தான் அவசர நிலைமை ரத்துச் செய்யப்பட்டிருப்பது இந்தியாவுக்குத் தொடர்புடையதல்ல; ஆனால் அதன் பேரால் பூட்டோவும் அவரது கோஷ்டியினரும் வெளியே வந்து போடுகிற குதியாட்டங்களில் இந்தியா அதிகக் கவனம் செலுத்தவேண்டி இருக்கிறது. பூட்டோ என்றால் பாக். அகராதியில் "நாய்" என்றொரு பொருள் இருப்பதாகக் கூறப்படுகிறது. அதனை மெய்ப்பிப்பதுபோல சில ஆண்டுகளுக்கு முன் ஐ. நா. அவை நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. அந்தப் பூட்டோதான் இப்போது தான் வெளியே வந்துவிட்டதாகவும்—இந்தியா தயாரா என்றும் அறைகூவல் விட்டிருக்கிறார். இந்தியா மீதான பாக் விவகாரங்களைப் பெரிதாக்கிக் காட்டி தன் அரசியல் கொள்கைகளை வகுத்துச் செயல்படும் பூட்டோ, இப்போதைய பாக். அதிபர் அயூக்கானையும் செல்லாக் காசாக்கி விட்டிருப்பது நன்கு புலனாகிறது, அதோடு, அடுத்த பொதுத் தேர்தலில் அயூப் போட்டியிடப் போவதில்லை என்று உறுதியாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இப்போதைய நிலைமையில் அடுத்த அதிபர் பூட்டோவாகத் தானிருக்கமுடியும் என்பது தெளிவாகிறது. இது இந்தியாவுக்கு ஒரு துரதிருஷ்டமான சமிக்ஞை ஆகும். காஷ்மீர் பிரச்னையைத் தீர்வுக்குக் கொண்டுவர வேண்டுமென்பதில் அணு அளவுகூட நம்பிக்கை இல்லாதவர் பூட்டோ! அதனை வெளிப்படையாகவும்கூட கூறச் செய்கிறார்! எனவேதான் இந்தியா, அதிகக் கவனமும், அக்கறையும், ராஜதந்திரப்போக்கும் மிகுதியாகக் கொண்டிருக்கவேண்டும் என்ற நிலை தானாகவே உருவாகி விட்டது! அரசியலுக்கு இது நல்லதோ கெட்டதோ! காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

உலகுக்கே நஷ்டம்!



போலிப் பெருமை தேடிக் கொள்ளவோ, நாட்டின் பிற பகுதிகளைத் தரக்குறைவாகக் கருதுவதற்காகவோ அல்ல தம்பி! தமிழகத்தின் தனிச் சிறப்புகள் பற்றி நாம் அறிந்திட வேண்டும், அகமகிழ்ந்திடவேண்டும், எழுச்சி பெற்றிடவேண்டும் என்று நான் கூறுவது, பிற பகுதிகளும், உலகின் பல்வேறு நாடுகளும் கேட்டு இன்புறத்தக்க, அறிந்து மேற்கொள்ளத்தக்க பண்பாடு நம்முடையது, அத்தகைய கருவூலத்தை இழந்து விடுவது நமக்கும் நாட்டுக்கும் மட்டுமல்ல, உலகத்துக்கே நஷ்டம் என்பதாலேயே, தமிழகத்துத் தனிச்சிறப்பு இயல்புகளை நாம் நன்கு அறிந்திட வேண்டும் என்று கூறி வருகிறேன்.

—'காஞ்சி' பொங்கல் மலரில்.

இருதயத்தில் ஓர் ரோஜா



முல்லை-சத்தி

இக்கதை பத்திரிக்கைக்காக எழுதப்பட்ட தொடர்கதை அல்ல; ஆகவே வாரந் தோறும் ஆவலைத் தூண்டும் திருப்பங்கள் இருக்காது! இது ஒரு நெடுங்கதை! இரண்டு இளம் நெஞ்சங்களின் ஜீவிதப் போராட்டம்! மெழுகுவர்த்தி தன்னைத் தானே அழித்துக்கொண்டு ஒளி அளிக்கிறது; ஊதுபத்தி தன்னைத் தானே மாய்த்துக் கொண்டு மணம் வீசுகிறது! மனித இனத்திலும், எப்போதோ பூக்கின்ற அத்திப் பூப்போல, மெழுகுவர்த்தியும், ஊதுபத்தியும் தோன்றத்தான் செய்கின்றன என்ற அடிப்படையில் பின்னப்பட்டதுதான், இக்கதை.

முல்லை-சத்தி.

இதழ்: 1

நீலப்பட்டாடையில் வாரி இறைக்கப்பட்ட முல்லை மொக்குகளைப்போல, வான மண்டலம் முழுவதும் நட்சத்திரப் பூக்கள் சிதறிக்கிடந்தன! வைர மணிகள் நிறைந்த தனது முந்தானையைப் பரப்பிவிட்டு நிலாப் பெண்ணுள் இட்டடி நோக எடுத்தடிக் கொப்பளிக்க வலம் வந்துகொண்டிருந்தாள். சிங்காரச் சென்னையின் அலங்கார விளக்குகள் மின்மினியைப்போல ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்தன. மெரினுக்கடற் கரையில், மார்கழி மாதத்துக் குளிரின் காரணமாகவோ, என்னவோ மக்கள் கூட்டம் மெலிந்து காணப்பட்டது! இளம் காதலர்கள் தங்களது குளிர்ப்போர்வையை அணைத்தவாறு, தங்களது எதிர்காலத்தைக் கனவு கண்டு கொண்டிருந்தனர்! ‘இந்த மணற்பரப்பில்தான் எத்தனை எத்தனைக் கதைகள்! விதவிதமான காதல்கீதங்கள்! நவநவமான நாடகங்கள்! அது மட்டுமா! சிரிப்பிலே துவங்கி கண்ணீரிலே முடிந்த வரலாறுகள் எத்தனை! இத்தனையும் நடந்து முடிந்தும்,

தொடரோவியம்

மீண்டும் அதே கதை — வேறு, வேறு ரூபத்திலே தொடர்ந்து நடந்துக் கொண்டிருக்கிறதே! இதற்கு முடிவே இல்லையோ?' என்று சிந்தித்து, அதனுல் ஏற்பட்ட கோபத்தாலோ என்னவோ, தனது நீண்ட கரங்களை கரை மீது வீசிக்கொண்டிருந்தான், கடல் அரசன்!

எங்கேயோ ஒரு உணவு விடுதியிலிருந்து 'ஜாஸ்' இசை, தென்றலில் தவழ்ந்து வந்துகொண்டிருந்தது! இந்தக் காலத்தில் சென்னை உணவு விடுதிகளில், உணவை விட அதிகமாகக் கிடைப்பது மெலிந்த மேற்கத்திய இசையும் மனித உடலின் வெறியைக் கிளப்பி விடும் நடனமும்தானே!

இரண்டு நிர்வாணப் பெண்களின் ஓவியங்களைத் தாங்கிக்கொண்டிருந்த அந்த உணவு விடுதியின் கதவுகள் திறந்தன! ஒரு மனித மூட்டை வெளியே வந்து விழுந்தது! திறந்த வேகத்திலேயே, கதவுகள் மூடிக் கொண்டன!

விழுந்த அந்த மூட்டை எழுந்து நின்றது! ஒரு முறை இழுத்து மூடப்பட்ட கதவுகளைப் பார்த்தது! மீண்டும் உள்ளே போகலாமா என்று நினைப்பதற்குள், முரட்டு கூர்கா அருகே வந்து 'ஜாவ் - ஜாவ்' என்முன்! கூர்க்காவின் முரட்டு மீசையையும், கையிலிருந்த குறுந்தடியையும் கண்டு அந்த உருவம் பயந்திருக்க வேண்டும்! கூர்கா 'ஜாவ்-ஜாவ்' பல்லவியை பாடிக்கொண்டே இருந்தான்!

'மியாவ்-மியாவ்'பூனையைப்போலசப்தம்; புலிப்போல உருவம்; என்று கூறிக்கொண்டே, இல்லை இல்லை, உளறிக்கொண்டே அந்த உருவம் தள்ளாடி தள்ளாடிச் சென்றது! மதுவின் போதை அந்த உருவத்தை பூர்ண மாக ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது! உடலுக்கு உரமும், உள்ளத்துக்கு உற்சாகமும் அளிக்க மதுவைக் குடிப்பதாகச் சொல்லி, பாட்டில்களை உருட்டிவிட்டு, உடலின் வலிவை இழந்து, தெளிவாகப் பேசும் தன்மையை இழந்து, உளறிக்கொண்டு தள்ளாடி தள்ளாடி நடப்பதில்தான் என்ன இன்பம் காண்கிருர்களோ?

'இந்த பெரிய பட்டணத்திலே இந்த ஒரு ஓட்டல் தானு...? போடா...பிச்சைக்காரப் பயலே...' என்று கூறியவண்ணம் அந்த உருவம் மெரினுக் கடற்கரையின் நீண்ட நெடுஞ்சாலையில் நடந்து கொண்டிருந்தது! நடந்து கொண்டிருந்தது என்பதைவிட, கடற்காற்றுடன் போராடி முன்னேறிக் கொண்டிருந்தது என்பதே பொருத்தமாக இருக்கும்!

'டிங் - டிங்' என்று மணி அடித்துக் கொண்டே வந்த ஒரு ரிக்ஷா, அந்த உருவத்தைக் கண்டதும், 'கிறிச்' என்ற சப்தத்தோடு நின்றது!

'இன்னு சாமி...வர்ரியா...நம்ம வண்டியிலே குந்திக்கோ...உன்னெக் கொண்டுப் போய் தள்ளிடறேன் ......' என்று தனக்கே உரிய தமிழில் பேசினுன் ரிக்ஷாக்காரன். பதில் ஏதும் வராததைக் கண்ட அவன், மீண்டும் 'வா...சாமி...நீ எங்கே போகணுமின்னுலும் நான் இஸ்துக்கிட்டுப் போறேன்...வா, ராஜா, வா...' என்முன்.

'போடா...போக்கத்தவனே...இந்த ராஜா பல்லக்கிலெதான் போவார்...' என்றது அந்த உருவம்...

"ஆமாம்...ஆமாம்...இப்படியேப் போனு நாலுப் பேர் வந்து பல்லக்கிலே தூக்கினுப் போவாங்க... கிருஷ்ணும்பேட்டை சுடுகாட்டுக்கு..." என்முன் ரிக்ஷாக்காரன்.

"ராக்கெட்டிலெ சந்திர மண்டலத்துக்குப் போனுலும், ரோல்ஸ் ராய்ஸ் கார்லெ பவனி வந்தாலும் கடைசியாப் போற இடம் அதுதான்...நீ முன்னுலெப் போ; நான் பின்னுலெ வர்ரேன்..."உலகே மாயம்...வாழ்வே மாயம்..." என்று சம்பாஷணையிலிருந்து சங்கீதத்திற்குத் தாவியது அந்த உருவம்...

'சுத்த சாவுக் கிராக்கி' என்று கூறிக்கொண்டே, ரிக்ஷாக்காரன் டங் - டங் கென்று மணியடித்துக் கொண்டே வேகமாக ரிக்ஷாவை ஓட்டிச் சென்முன்!

'பார்த்தாயா...குடித்துவிட்டு அவன் ஆடற ஆட்டத்தை'—அப்பக்கம் சென்ற ஒருவர் கூறினர்.

'யாரடா குடிச்சது...மது என்னை குடிச்சுட்டுது' என்ற பதில் வந்தது.

'தண்ணிப் போட்டாலும், தத்துவமாப் பேசருன்... தண்ணிப் போட்டாத்தானு தத்துவமும் வரும். வா... வா...' என்று கூறிக்கொண்டே அவர்கள் வேகமாக நடந்தனர்!

'குடிச்சுட்டேனும்...ஏன் குடிக்கக் கூடாதா? காபிடியெ மொடா, மொடாவா குடிக்கருங்க...அவங்க சக்திக்கு அதைத்தான் அவங்க குடிக்க முடியும்...என் சக்திக்கு பிராந்தி – விஸ்கி குடிக்கறேன்...ரெண்டுமே குடிதானே...! அப்படி இருக்க என்னெ மட்டும் ஏன் குடிகாரன்னு சொல்ருங்க......ஆஹா...ஆஹா...பைத்தியக்காரப் பசங்க...தேவாதி தேவனுங்களே 'தேவ பானம்' குடிச்சதா நம்ம புராணம் சொல்லுது ...ஆண்ட

வன் குடிக்கலாம்; அவன் படைச்ச மனிதன் குடிக்கக் கூடாதா......மடப் பசங்க......வர வர ஜனங்களுக்கு புத்தியே மங்கிப் போச்சி...குடிக்கக் கூடாதுங்கருன்... சேச்...சே...இந்த தமிழ் நாட்டிலியே இருக்கக்கூடாது ......பம்பாய்...பெங்களூர்......கேரளாவுக்குப் போய்விட வேண்டியதுதான்......" என்று தெருவிலே இருந்த விளக்குக் கம்பத்திடம் வீராவேசமாகப் பேசிக்கொண்டிருந்தான் நமது கதாநாயகன். பதில் ஏதும் வராததைக் கண்ட அவன், 'என்ன நான் பேசிக்கிட்டே இருக்கேன்...நீ பதிலே சொல்லலியே...உனக்குஎன்ன திமிர்' என்று கூறிக்கொண்டே ஓங்கி அந்த விளக்குக் கம்பத்தை ஒரு குத்துவிட்டான். அவனது கை விண் விண் என்று வலித்தவுடன் 'ஐயோ...ஐயோ...என்னெ அடிச்சுட்டானே......என்னெ அடிச்சுட்டானே' என்று உரத்தக் குரலில் ஒப்பாரிவைக்க ஆரம்பித்தான்.

எதிர் சாரையிலே அவசர அவசரமாகப் போய்க் கொண்டிருந்த ஒரு பெண், இச்சப்தத்தைக் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினாள். அவளது நடை தடைப்பட்டது! அதே நேரத்தில் அவனும் அவளைப் பார்த்தான்!

'ஆஹா...என்ன அழகு...என்ன அழகு' என்று கூறிக்கொண்டே அவள் அருகில் அவன் சென்றான். அச்சத்தால் அவளது மான்விழிகள் மிரண்டன!

அவனிடமிருந்து தப்பித்துச்செல்ல அவள் முயன்றபோது, அவன் அவள் குறுக்கே நின்று, 'என்னை விட்டு ஓடிப் போக முடியுமா...?' என்று பாட ஆரம்பித்தான்!

தூண்டிலில் சிக்கிய மீன்—வலையில் விழுந்த மான்—இந்த நிலையில் அப்பெண் இருந்தாள்! அவனே கவிதை மழை பொழிய ஆரம்பித்தான்,

"வானத்து நிலவின் வடிவே!
மாநிலத்து மலரின் உருவே!
வா...அருகினில்...வா...!
நட்சத்திரப் பந்தலுக்குக் கீழே—நாம்
நர்த்தனம் ஆடுவோம்..."

—என்று கூறி அவளது கரத்தைப் பற்றினான்.

நெருப்பைத் தீண்டியதைப்போல் திடுக்கிட்ட அப்பெண் 'விடு......விடு......என்னை விடு' என்று அலறிக்கொண்டே அவனது இரும்புப் பிடியிலிருந்து விடுவித்துக்கொள்ள போராடினாள்!

"'வீணையின் நாதமும், வேணுகானத்தின் இசையும் இந்தக் குரலுக்கு ஈடாகுமா...? தங்கத் தாம்பாளத்தில் மாணிக்கப் பரல்கள் சிதறும்போது ஏற்படும் ஒலிபோல் இனிக்கிறதே உன் குரல்...பேசு...உன் பேச்சே சங்கீதமாக இருக்கிறது..." என்று கூறிக்கொண்டே இன்னும் நெருக்கமாக அவளிடம் நெருங்கினான், அவள் அவனை உதறித் தள்ளிவிட்டு ஓட ஆரம்பித்தாள்!

"மானின் துள்ளலும், புள்ளி மயிலின் ஆட்டமும் இதற்கு ஈடாகுமா...?' என்று கூறிக்கொண்டே அவளை தொடர்ந்து ஓடி அவளை இறுகப் பற்றினான். அவளது அலறல் கடற்கரையின் நிசப்தத்தையே கிழித்தது! எங்கிருந்தோ......'என்ன அங்கே கலாட்டா' என்று கூறிக்கொண்டே சிலர் ஓடிவந்தனர். வந்தவர்கள் நிலைமையை புரிந்துகொண்டு அவனைத் தாக்க ஆரம்பித்தனர். அடி விழ விழ அவனது போதை சற்று குறைந்திருக்க வேண்டும்!

"அடிக்காதிங்க...அடிக்காதிங்க..." என்று அவன் எழுப்பிய அபயக் குரல் அவர்களின் காதில் விழவில்லை.

சென்னை நகரில் இப்படிப்பட்ட ஒருவன் அகப்பட்டுக் கொண்டால், அவனை உதைத்து எலும்புகளை எண்ணாமல் விடமாட்டார்களே! இந்தக் கலாட்டாவில் அந்தப் பெண் மாயமாய் மறைந்தாள்! அதே நேரத்தில் எங்கோ போலீஸ்காரர்களின் விசில் சப்தம் கேட்டது. இரண்டு போலீஸ்காரர்கள் ஓடிவந்தனர்! அவர்களைக் கண்டதும் 'அடிக்கும் படலம்' குறைந்தது. இந்தத் தருணத்தை பயன்படுத்திக்கொண்டு அவன் அவர்களை ஏமாற்றிவிட்டு ஓடி மறைந்தான்!

போலீஸ்காரர்களிடம் அவர்கள் நிலைமையை விளக்கினர். 'யார் அவன்...அந்தப் பெண் எங்கே?' என்ற கேள்வியை ஒருவருக்கு ஒருவர் கேட்டுக் கொண்டு. பதில் கிடைக்காமல் திகைத்தனர்!

அப்போது அங்கே விழுந்து கிடந்த ஒரு பேனா அவர்கள் கையிலே கிடைத்தது! போலீஸ்காரர் அதை எடுத்து விளக்கு வெளிச்சத்தில் பார்த்தார், அதில் 'ஆனந்த், அரசினர் கல்லூரி' என்ற எழுத்துக்கள் மின்னின!

* * *

இதழ்: 2

டாண் - டாண் என்று பத்து முறை ஒலித்து காலதேவன் 'காலம் மிக வேகமாக ஓடுகிறது. காலத்தை வீணாக்காதே' என்று மாணவர்களுக்கு நினைவுப்படுத்தினான்.

மாணவர் பட்டாளம் மிக அவசர அவசரமாக கல்லூரிக்குள் புகுந்து கொண்டிருந்தது! சோலையில் சிரிக்கும் மலர்கள்போல் மாணவிகள் அசைந்தாடிக் கொண்டிருந்தனர்!

"மாலை மெரினா...Don't forget' என்றான் ஒருவன்

(10-ம் பக்கம் பார்க்க)

துயரக் கடல்!

ஆண்டாண்டு காலம் அழுதாலும் வந்தே
அமையாத அறிவின் உருவம்!
வேண்டாத ஒன்று விளைவாக வந்து
விழிநீரைக் கொண்ட மறவன்!
தீண்டாத உயிரை தெரியாமல் பற்றி
தெரிந்தோடிப் போன சாவே!
மாண்டாரோ அண்ணா? மனம்ஒப்ப வில்லை
மாறாது துயரக் கடலே!

தாய்க்காக வாழ்ந்து 'தமிழ்நாடு' சொல்ல
தகைசான்ற பெயரை இட்டாய்!
வாய்க்காக ஏங்கி வருகின்ற சொல்லை
வரவேற்கும் நாட்டை விட்டாய்!
நோய்க்காக வீழ்ந்து நோக்கங்கள் தாழ்ந்து
நொடியில்நீ தூங்கிப் போனாய்!
போய்விட்டாய் என்றால் பொய்யென்று தோன்றும்
பொறுக்காது துயரக் கடலே!

கண் இல்லை இன்று; கருத்தில்லை நாட்டில்
கவர்ந்தோடிப் போய்விட் டாயே!
புண்பட்ட நாட்டைப் புரியாத இருட்டில்
போட்டோடிப் போய்விட் டாயே!
மண்தின்ன வோநீ மறைந்தோடிப் போனாய்!
மனம்ஒப்ப வில்லை இன்னும்!
பண்பாடும் வாயும் பதில்சொல்ல அஞ்சும்
பாய்கின்ற துயரக் கடலே!

—உதயை மு. வீரையன்.

ஐயோ மறைந்தாரே

ஓ கால தேவா! கருணை தலைவா!
என்னடா உனது ஆட்சி
என்னடா உனது அன்பு
என்னடா உனது நீதி
என்னடா உனது நேர்மை
என்னடா கருணை சீச்சீ
எறும்பையும் வதைக்கா அண்ணன்
என்னடா செய்தார் உன்னை
ஏனடா கொன்றாய் பாவி

நாட்டையே வணங்க வைத்த
நயமிகு பேச்சு; நெஞ்சக்
கூட்டுக்குள் புகுந்து ணர்ச்சி
கூட்டிய புரட்சி பேச்சுக்
கேட்பவர் பிணிக்கு மாறு
கிளத்திய அருவி பேச்சுக்
கேட்கவோ தேவா! எங்கள்
அண்ணனை அழைத்துக் கொண்டாய்

அலையெனப் பாய்ந்து சென்று
அண்ணனை வடித்து வைத்த
சிலையடிக் கூடி நின்று
தேம்பிய குரலைக் கேட்டால்
குலைகுடல் அதிரு தய்யா?
கொடியவா! தமிழ மக்கள்
நிலையினைத் தாழ்த்தத்தானோ
நிமலனைப் பறித்துக் :கொண்டாய்!

நடப்பது உலகா இல்லை
நாயகன் இறந்த பின்னும்
மடிந்திட லின்றி பாவ
மனிதர்கள், சடலம் தூக்கி
நடமிடும் பிணங்கள் வாழும்
நரகமே; தர்மன் வாழும்
இடமதே உலகம் அண்ணன்
இருப்பதே சொர்க்க பூமி.

அண்ணனும் நானும் சேர்ந்தே
அழலிடை எரிய வேண்டும்
அழுபவர் எனக்கும் சேர்த்தே
அழத்தானே வேண்டும்; தம்பி
அண்ணனைத் தொடர்ந்தா னென்று
அனைவரும் கூற வேண்டும்
அய்யனே! அந்த பாக்யம்
அரைபோதில் கிட்ட வேண்டும்

—கீ. க இராசேந்திரபாபு.

அன்னை நீ!

அண்ணனே! அறிவின் சொத்தே!
அன்பினில் விளைந்த முத்தே!
எண்ணிலா இளைஞர் நெஞ்சின்
எழுச்சியே! இதயப் பண்ணே!
கண்ணிலாச் சிலையாய் நாட்டின்
காவியம் கிடக்கும் போதில்
மன்னனே! முறைமை தன்னை
மறந்ததும் முறையோ ஐயா!

தமிழின்று தோற்றாள் பிள்ளை!
தம்பியர் அண்ணன் தோற்றோம்!
சிமிழொத்த வுலகம் தூய
சிந்தனை யாளன் தோற்க;
இமிழ்கடற் றமிழர் கொற்றம்
இறைவனை இழந்து தேம்ப
உமிபற்றிப் பரவுந் தீயாய்
ஊழுக்கே தோற்றோ மைய்யா!

பணிவினால் தலைமை சேரப்
பிரிவினால் உறவு சேரத்
துணிவினால் தமிழர் சேர்த்த
துரையினைக் காண்ப தென்று?
மணிக்குரல் மொழியைச் சேர
மலர்க்கரம் கவிதை சேர
அணிதமிழ்ச் சேர சோழ
பாண்டியர் கொலுவோ சேர்ந்தாய்?

மன்னனே உனது பேரை
வையகம் புகழக் கேட்டுத்
தென்னரின் சிரமே நிற்று!
தேய்ந்திட்ட புகழோங் கிற்று!
அண்ணனைப் பிரிந்தி ருந்தால்
அன்னையின் நிழலி ருக்கும்!
அன்னையை இழந்தோம்!—எங்கள்
அழுகைக்கு முடிவே யில்லை!

நேற்றுநீ யிருந்தாய்—நெஞ்சில்
நிம்மதி யிருக்கக் கண்டோம்!
போற்றிநீ வளர்த்தாய்—உன்றன்
பூங்கரம் தவழ்ந்த தோளில்
கூற்றுவன் விதித்த கல்லின்
சுமைமிகக் கொடிதே யம்மா!
ஆற்றுவார் பிறக்க வில்லை
'அன்னை நீ' அண்ணா னில்லை!

—கு. க. பிறைசூடிப்பித்தன்.

அண்ணாபேர் அவனி யாளும்!

திறம்விளங்கும் தமிழ்மக்கள் உள்ளந் தோறும்
திருக்கோவில் கொண்டிருந்த தேவே! தேவே!
குறள்விளக்கே! தமிழ்ச்சுடரே! கொள்கைக் குன்றே!
குவலயத்தார் போற்றவந்த தமிழர் கோவே!
மறம்விளங்கும் எதிரிகட்கும் மாட்சி தந்து
மகாத்மாவின் வழிநடந்த மேதாய்! தாதாய்!
அறம்விளங்க அரசியலில் அமர்ந்தி ருந்தாய்!
அன்பருளால் ஆண்டுவந்தாய்! அண்ணா! அண்ணா!

நீயிறந்தாய் என்றவுடன் நினைவி ழந்தோம்!
நீங்காத துயர்க்கடலில் ஆழ்ந்து விட்டோம்!
தாயிழந்த சேயானோம்! தவித்து நின்றோம்!
தவிக்காத உயிரில்லை! பொருளும் இல்லை!
நாயிழிந்த பிறவிகளாய் நாங்கள் எல்லாம்
நன்றிகெட்டோம்! நின்றுவிட்டோம்! நாசக் காலன்
போயிழுக்கா முன்பின்னர் தடுத்துப் போக்கும்
பெருவீரம் பெற்றில்லோம்! புலம்பு கின்றோம்!

திருக்குறளைத் தரணிமக்கள் தரிக்கச் செய்தாய்!
தமிழ்காத்தாய்! தமிழருக்குத் தன்மை தந்தாய்!
இருப்பினிலும் பெருமைகண்டாய்! ஏற்றம் பெற்றாய்!
இறப்பினிலுஞ் சிறப்புற்றாய்! இலக்கி யத்தின்
குறிப்பினிலும் இடம்பெற்றாய்! ஞால மக்கள்
கொண்டிருந்த பேரன்பை ஓ நங்கு காட்டும்
வரப்பினையும் வையத்தார்க் கிறபபில் தந்தாய்!
வானுலகம் உள்ளளவும் உன்பேர் வாழும்!

—ச. தங்கவேலு.

இருக்கின்றாய் நீ!

விழிகளினைக் குளமாக்கி வைத்து விட்டு
விண்ணுலகு தனியாகச் சென்ற தேனோ?
மொழியுண்டோ உலகத்தில் உன்பேர் சொல்ல
மூத்தோனே, தமிழகத்தின் முதல்வா அண்ணா!
அழுகையொலி அலைகடலை மிஞ்சி நிற்கும்
அணையுண்டோ சிந்துகின்ற கண்ணீ ருக்கே?
தொழுகின்ற மக்களினம் துடிது டிக்க
தொடர்ந்தாயே பெரும்பயணம் அன்பின் மன்னா!

எழுத்தாலும் பேச்சாலும் மக்கள் நெஞ்சில்
ஏற்றதொரு நல்லிடத்தைப் பிடித்துக் கொண்டீர்
பழுதான பழமையினைக் குழியில் தள்ள
பல்வேறு காரணங்கள் கண்டு சொன்னீர்
விழிபோன்ற மொழிவாழ வேண்டும்; நல்ல
வீரமிகு தமிழினந்தான் தலையெ டுக்க
வழிபலவும் சொன்னதுடன் நடந்து காட்டி
வரலாற்றில் தனியிடத்தைப் பெற்றீர் அண்ணா!

கலைவாணர் சிலையினைநீ கடைசி யாக
கனிவோடு திறந்திட்டாய்; அந்த வள்ளல்
அழைத்தாரோ உனையங்கே? அதனை ஏற்றே
அவ்வுலகம் சென்றீரோ? அறியோம் நாங்கள்
நிலையான கொள்கையினைத் தந்தாய்; ஆனால்
நிலைபெற்று நில்லாமல் ஏன்நீ சென்றாய்?
விலைமதிக்க முடியாத சொத்தே உன்றன்
வீரவுரை நாங்களினிக் கேட்கப் போமோ?

சித்தார்த்தன் மறுபிறப்பே! சிந்தை வாழும்
செந்தமிழே! தேனிசையே! தென்றல் நீயே!
முத்தமிழுக் குயிர்தந்த வித்த கன்நீ!
மூவேந்தர் போல்பெருமை பெற்ற வன்நீ!
சித்திரமாய் எம்நெஞ்சில் பதிந்து விட்ட
சீர்திருத்தப் பேரொளியே! சென்ற தெங்கே?
புத்துலகச் சிற்பியே,நீ சாக வில்லை
புதுமதியாய் பூந்தமிழாய் இருக்கின் றாய்நீ!

—ஈரோடு ப கதிரவன்.

நம்பமாட்டோம்!

காந்தியில்லை என்றபெரும் குறையைத் தீர்க்க
காஞ்சிநகர் உனையீன்ற கதையைக் கேட்டோம்;
பூந்திறமை உன்னுரிமை ஆன தாலே
புகழ்மணக்கும் 'தமிழ்நாடு' மலரக் கண்டோம்!
சாந்தியினைச் சத்தியத்தால் இலங்கச் செய்த
சன்மார்க்க வித்தகனே! உன் மறைவால்
சாந்தியிலை! ஒளியில்லை! கண்ணீர் சிந்திச்
சக்தியின்றிப் போனதையா மாந்தர் நெஞ்சம்!

அறம்தன்னைச் செய்ததினால் தருமன் ஆனாய்!
அறியாமை களைந்ததனால் அறிஞன் ஆனாய்!
குறள்தன்னில் உனைவைத்தே தலைவன் ஆனாய்!
கொள்கையை உயர்த்தினாய் முதல்வன் ஆனாய்!
புறம்தன்னை அகம்தன்னைக் கற்றுத் தேர்ந்து
புலவோர்க்கும் பொருள்கூறும் புலவன் ஆனாய்!
திறம்தன்னைக் காட்டிநல் மாந்தர் நெஞ்சைத்
திருடினாய் உலகோர்க்கு அண்ணன் ஆனாய்!

பெற்றெடுத்த தாய்நாட்டைத் தமிழ்நா டென்று
பேர்சொல்ல வைத்தவனே! போய்விட் டாயா!
கற்றறிந்த மேதைகளும் வணங்கத் தக்க
கன்னித்தமிழ்க் காவலனே போய்விட் டாயா!
பற்றனைத்தும் மக்களிடம் வைத்து நெஞ்சைப்
பற்றியநல் பேரறிஞா! போய்விட் டாயா!
புற்றதுவா பற்றியது! உன்றன் ஆவி
போனதுவா நாங்களதை நம்பமாட் டோம்!

—காரை. நா. பூமிநாதன்.

7-ம் பக்கத் தொடர்ச்சி

விடை பெற்று போய்க்கொண்டிருந்த வனிதாமணி ஒருத்தியிடம். For-get-me-not என்று கூறிக்கொண்டே அவள் சென்றாள். சுவாரஸ்சியமாக பேசிக் கொண்டிருந்த ஒரு ஜோடியிடம் ஒருவன்....ஏம்பா நேத்து சபையர் தியேட்டரிலே பேசினது போதாதா...?இங்கே வேறியா?" என்றான் 'நீகூட படத்துக்கு வந்திருந்தியா? என்று அசடு வழிய கேட்டான் அவன். 'வந்தேன்...... பார்த்தேன். படத்தை அல்ல உங்கள் காதல் நாடகத்தை' என்று பதில் வரவே அந்த ஜோடி திடுக்கிட்டுப் பேந்தபேந்த விழித்தது!

இந்த சலசலப்பையும், கலகலப்பையும் எதையும் சட்டை செய்யாமல் ஆனந்த் போய்க்கொண்டிருந்தான்!

அவனைக் கண்டதுமே சிரிப்பும், பேச்சும் குறைந்தது! 'சாமியார் போகிறார்' என்றாள் ஒரு குறும்புக்காரி! 'ஏண்டி அவரெ கேலி செய்யரே! பாவம்' என்று பரிந்து பேசினாள் ஒருத்தி! 'ஏண்டி உனக்கு அவர் பேர்லெ அவ்வளவு அக்கறை...ஏதாவது...?" "லவ்ங்கிறியா? அவருக்கு என்னெ எல்லாம் பிடிக்காது. அவர் சரஸ்வதியெ லவ் பண்றார்." "எந்த சரஸ்வதி...நம்ம காலெஜிலே அந்தப் பேர்லெ யாரும் இல்லேலே?

"அவள் காலேஜ் பெண்ணல்ல; தெய்வம்!

"ஓஹோ...கல்விக் கடவுளைச் சொல்றியா? அதானேப் பார்த்தேன்...இந்த புத்தகப் பூச்சி யார் வலையிலாவது விழுந்து தத்தளிக்குதோண்ணு நினைச்சேன்" "அவரும் நம்மெப் போல பைத்தியம்ன்னு நினைச்சியா? இப்படிப் பல பேச்சுகளுக்கு மூலப் பொருளான ஆனந்த் எதையும் கவனிக்காமல் போய்க்கொண்டிருந்தான், குனிந்த தலையை நிமிராமல்!

அப்போது பொய்ங்...பொய்ங் என்று மியூசிகல் ஹாரனின் ஒலி கேட்டது! அவ்வளவுதான். குபீரென்று பறந்து செல்லும் புறாக்களைப்போல மாணவிகள் சிதறி ஓடினர்!

'யானை வரும் பின்னே; மணியோசை வரும் முன்னே' என்கிற மாதிரி ஹாரன் அடிச்சி நம்ம பய முறுத்திட்டு வர்றான்."

"யானை இல்லாடி;பூனை"

"பூனைக்குத்தான் ரொம்ப குறும்பு"

இப்படி அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதுகார், காலேஜுக்குள் நுழைந்தது!

காரில் வந்த ராஜு, ஓடும் பெண்களைப் பார்த்து "ஹை ...ஏன் இப்படி ஓடறீங்க...... கலா......பவுடரைக் கொஞ்சம் குறையுமா......? மிலா... உனக்கு இந்த கொண்டை நல்லாவே இல்லை...தயிர்க்காரி மாதிரி இருக்கு...... சுலோசனா...உன் பேருதான் 'சுலோ'ன்னா, உன் நடையும்'சுலோ'வா இருக்கே..." என்று கூறிக்கொண்டே, காரிலிருந்து இறங்கிச் சென்றான். வழியில் தென்பட்டவர்களை அவன் கேலி செய்யாமல் போகவில்லை. பெண்கள் அவன் கண்ணில் படாமல் தப்பிக்க முயன்றனர்.

"டேய் ராஜு...ஏண்டா இந்த பெண்களெ இப்படி கலாட்டாப் பண்றே?"

"ஆனந்த்! நீ போதி மரத்தடியிலே பூஜைபண்ணப் பிறந்தவன்; நான் சோலையிலே பாடும் குயில்! எப்போதும் சிரிச்சிட்டே இருக்கணுமின்னு நினைக்கறவன்!"

"சரி...நீ சிரிக்கிறத்துக்காக மத்தவங்க அழணுமா?"

"டேய் ஆனந்த்...நான் செய்யற தமாஷிலே யாரும் அழமாட்டாங்க...ரகசியமா ரசிப்பாங்க...நான் வாழ்க்கையை ஒரு மலர்த் தோட்டமா நினைக்கறேன். தென்றலிலே சிரிக்கும் மலர்கள்போல் நாமும் சிரித்துக் கொண்டே இருக்கவேண்டும்!"

"ராஜு...சோலையிலே மலர் மட்டுமல்ல; முள்ளும் இருக்கும்..."

"முள் குத்துகிறதேண்ணு பயந்தா ரோஜாவைப் பறிக்க முடியுமா?"

"முள் நிரம்பிய ரோஜா தேவையா?"

"நல்ல கேள்வி...ஆனந்த்...முள்ளுக்குப் பயந்து ரோஜாவே வேண்டாம் என்கிறாய்... உன்னை சாமியார் என்று அழைப்பது சரிதான்!"

"எனக்கும் ரோஜாமீது பிரியம் உண்டு; ஆனால்..."

"அது தானாக வந்து உன் மடியில் விழ வேண்டும் என்கிறாய் இல்லையா...?"

"இல்லை; இல்லை......அதைப் பறிக்க வேண்டிய காலமும் இருக்கிறது......பக்குவமும் இருக்கிறது"

"அதற்குள் ரோஜா வாடிவிடும்......" ஜாக்கிரத்தை!"



என்று அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போது, எல்லோரையும் பிரின்சிபால் மீட்டிங் ஹாலுக்கு அழைக்கிருர் என்ற செய்தி வந்தது! எதற்காக இந்த நேரத்தில் மீட்டிங் ஹாலுக்கு பிரின்சிபால் அழைக்கிருர் என்பதை புரிந்துகொள்ளாமல் எல்லோரும் திகைத்தனர்!

மீட்டிங் ஹால் நிரம்பி வழிந்தது! அவசரச் செய்தி—அதுவும் மிகவும் முக்கியமான செய்தி இருந்தாலொழிய, இப்படி அவசர அழைப்பு மாணவர்களுக்கு வராது. ஆகவே ஏதோ, என்னவோ என்று ஒவ்வொருவரும் எண்ணிக்கொண்டிருந்த வேளையில் பிரின்சிபால் பேச ஆரம்பித்தார்!

''என்னருமை மாணவர்களே! இந்தக் கல்லூரி மாநிலத்திலேயே புகழ் வாய்ந்தது என்பதை நான் சொல்லத் தேவையில்லை. எந்தக் கல்லூரி எப்படி இருந்தபோதிலும், இந்தக் கல்லூரி ஒழுக்கத்தில் தலை சிறந்து விளங்கி வந்திருக்கிறது! எத்தனையோ சோதனையிலும், இக்கல்லூரி தனது கவுரவத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது! இத்தகைய புகழ்வாய்ந்த நமது கல்லூரிக்குக் களங்கம் ஏற்படும் வண்ணம் நேற்றிரவு ஒரு மாணவன் நடந்துகொண்டிருக்கிருன். அவன் பெயர் எனக்குத் தெரியும், என்ருலும் அவனே எழுந்து, இந்தக் கூட்டத்தில் மன்னிப்புக்கேட்டுக்கொள்வானேயாகில் அவனை நான் மன்னித்து விடுகிறேன்; இல்லையேல்...'' பிரினசிபால் பேச்சை நிறுத்திஞர். நிசப்தம் நிலவியது. யாரும் எழவில்லை!

''குற்றவாளி மன்னிப்புக் கேட்கப் போகிருனு......இல்லையா?'' கர்ஜித்தார் பிரின்சிபால்......

மீண்டும் நிசப்தம்!

''நேற்றிரவு நம் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் ஒருவன், ஒரு பெண்ணிடம் தகாத முறையில் நடந்து கொண்டிருக்கிருன், அவனும் இங்கே உட்கார்ந்துக் கொண்டிருக்கிருன்...''

மீண்டும் நிசப்தம்!

''அவன் அங்கே தவறிவிட்ட பேனு என்னிடம் இருக்கிறது'' கடைசி ஆயுதத்தை பிரயோகித்தார் பிரின்சிபால்!

மாணவர்கள் ஒருவரை ஒருவர் குழப்பத்தோடு பார்த்துக்கொண்டிருந்த வேளையில், ஆனந்த் அமைதியாக எழுந்து நின்ருன்! அந்தக் கூட்டமே ஆச்சரியக் கடலில் மூழ்கியது! ஆனந்தின் அருகில் அமர்ந்திருந்த ராஜு திகைத்தான். அவன் நெஞ்சம் படபடத்தது, உடல் நடுங்கியது!

''ஆனந்த், உன்னை ஒருவாரத்திற்கு சஸ்பெண்டு செய்திருக்கிறேன். நீ வெளியே போகலாம்! மற்றவர்கள் வகுப்புக்குச் செல்லுங்கள்'' என்று கூறிவிட்டு பிரின்சிபால் சென்ருர்!

மாணவர் கூட்டம் ஏதோ நடக்கக்கூடாதது நடந்துவிட்டதைப்போல ஆனந்தைப் பார்த்துக் கொண்டே கலைந்தனர், யாருக்கும் அவனிடம் பேசுகின்ற தைரியமும் தெம்பும் வரவில்லை!

அந்த பெரிய ஹாலில் ஆனந்த் தன்னந்தனியாக நின்ருன். அவன் அருகிலே ராஜு கண்களிலே நீர் வழியஉட்கார்ந்துக்கொண்டிருந்தான்!

ராஜு ஏன் அழுதான்?

யாருக்காக அழுதான்?

(வளரும்)

With the best compliments from:

Guru Shree Shantivijai Jain Trust,

MADRAS-7.

With the best compliments from:

Pioneer Civil Works

KANGAYAM.

அடுத்த கிழமை முதல்!

அன்புள்ள நண்பா!

இந்தியத் துணைக்கண்டத்து அரசியலில் இன்று என்னென்னவோ நடைபெற்றுக்கொண்டுள்ளன. டில்லி மத்திய அமைச்சரவையில் ஏதேதோ இலாகா பரிமாற்றங்கள் ஏற்பட்டு அமைச்சர்கள் ஒருவர்க்கொருவர் முகத்தில் வினாக்குறியைத் தேக்கிவைத்துக்கொண்டுள்ள ஒரு நிலையை ஒரு பக்கத்தில் பார்க்கிறோம்!

மேற்கு வங்காளம், உத்திரப்பிரதேசம், பீகார், பஞ்சாப் முதலான நான்கு மாநிலங்களில் இடைத்தேர்தல் நடைபெற்று, ஒரு மாநிலத்திலாவது எந்தவொரு கட்சிக்கும் முழுப் பெரும்பான்மை கிடைக்காத நிலையில் கூட்டணி ஆட்சி அமைந்துகொண்டு வருகிற நிலைமை மறுபக்கத்தில் காணக்கிடைக்கிறது.

நான்கு மாநிலங்களில் உத்திரப்பிரதேசத்தில் மட்டுமே கொஞ்சம் அதிக இடங்களைக் காங்கிரஸ் கைப்பற்றி இருக்கிறது. ஆயினும் ஆட்சி அமைக்கப் போதிய அளவுக்கு பெரும்பான்மை கிடைக்காத நிலை. உ. பி. காங்கிரஸ் தவியாய்த் தவித்துக்கொண்டிருக்கிற பரிதாபம்! நேருவின் சொந்த மாநிலம் அது! இதேபோல் பீகாரிலும் எந்தக்கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஆனாலும் காங்கிரசுக்கட்சி பிற எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து ஆட்சி அமைக்கப்போகிற விந்தையையும் இப்போது நம்மால் பார்க்க முடிகிறது.

மே. வங்கத்தில் 1967க்குப் பிறகு ஆட்சி அமைத்த அதே கூட்டணி இடையே நடைபெற்று முடிந்த ஜனநாயகப் படுகொலைக்குப் பிறகு நடைபெற்ற இடைத்தேர்தலுக்குப் பின் ஆட்சி அமைக்கின்ற வலுவைப் பெற்று, அன்று முதலமைச்சராயிருந்தவரே, இன்றும் முதலமைச்சராக—பல வலுவான அதிகாரங்களை இழந்த முதலமைச்சராக பதவிப்பொறுப்பில் அமர்ந்திருக்கவும் காண்கிறோம்.

பஞ்சாபில் :அகாலிதளமும் ஜன சங்கமும் ஆட்சி அமைத்துள்ளன!

மொத்தத்தில் 1967 பொதுத் தேர்தலுக்குப் பிறகு காங்கிரஸ் வளர்ச்சியடைந்து வருகிறது என்ற காங்கிரசுக்காரர்களது கருங் கண்ணாடியணிந்த கணிப்பிற்குப்பிறகு -அந்தக் கணிப்பு பொய்யானது—போலியான மதிப்பீடு என்பதையும் மெய்ப்பித்திருக்கின்றன அந்த மாநிலங்கள்.

பம்பாயில், எல்லைத்தகராறு ஒன்றைக் காரணம் காட்டி சிவாஜி என்ற மாராட்டிர பெருவீரன் ஒருவனது பெயரைத் தாங்கிய கும்பலொன்று தமிழர்களது உயிருக்கும் உடைமைக்கும் ஊறுண்டாக்கிக் கொண்டு' அந்த மாநிலத்தில் தமிழர் இனி நிம்மதியாக வாழ முடியுமா? என்று அஞ்சத்தக்க நிலைமையை உற்பத்தி செய்துகொண்டு வருகிறது.

ஆந்திர மாநிலத்திலும் இதேபோன்று வகுப்புக் கலவரம் என்று வருணிக்கத்தக்க அளவுக்கு வன்முறைச் செயல்கள் மலிந்து நாட்டின் அமைதிச் சூழலை, கல்லறை திசைக்கு நோக்கித் துரத்திக்கொண்டிருக்கிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக தமிழகத்தில்?......

அடிதடி,
சூறையாடல்,
கற்பழிப்பு,
தீ வைத்தல்,
கொலை, கொள்ளை,
வன்முறை தாக்குதல்

இவற்றில் எதுவும் நடைபெற்றுக் கொண்டிருக்கவில்லை. ஆனால், இவை அத்தனையும் ஒரே இடத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தால், அந்த இடத்தில் எத்தகைய சூழ்நிலை விரவுமோ, அதைவிட கவலைக்கிடமான—சோக மயமான—ஒரு நிலைமை இன்னமும் நிலவிக் கொண்டிருக்கிறது.

நண்பா, பீகாரில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிற, காங்கிரசுக் கட்சி, தன் பதவி வெறிக்காக பிற கட்சிகளோடு கூட்டுச் சேர்ந்துள்ள இரங்கத்தக்க நிலையினை பேரறிஞர் அண்ணா அவர்கள் சித்திரிக்கிறார்கள் என்று வைத்துக் கொள்!

எந்தெந்தக் கோணத்திலிருந்து எழுதினாலும் எத்தனை உவமைகள் காட்டி விளக்கினாலும் பேரறிஞர் சொல்லும் கருத்தினைப்போல், முறையினைப்போல் இன்னொருவரால் விளக்கிட முடியுமா?

அந்த "முடியாத நிலை" தான் இன்று தமிழகத்திலே சோகமான நிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

"தம்பி! தம்பி!! தம்பி!!! என்று கிழமை
தவறாமல் பலப்பல ஆண்டுகள் உன்னை அழைத்து
உரையாடி அளவளாவி வந்திருக்கிறேன்.
இரண்டு ஆண்டுகளாக அந்த விருந்தினை
இழந்து தவிக்கிறேன்"

என்று இந்த ஆண்டு பொங்கல் மலரிலே பேரறிஞர்

விற்பனையாளர்களுக்கு

விற்பனையாளர்கள் அனைவருக்கும் ஜனவரி மாத பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது விற்பனையாளர்கள் தங்கள் புாக்கித் தொகை முழுவதையும் அனுப்பிவைத்து ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

உரிமையாளர்.
'காஞ்சி.'

அண்ணா அவர்களே எழுதி இருந்ததனைப் படித்தாயல்லவா!

> "இனி என்றென்றும் அந்த இன்ப விருந்தினை உனக்குப் படைக்கமாட்டேன் போ"

என்று நம்மைப் பார்த்துச் சொல்லிவிட்டாரே அண்ணன்!

செவிக் குணவு இல்லாதபோதுதான் சற்றே வயிற்றுக்கு ஈயப்படும் என்பார்கள்.

இலக்கியக் கடலுள் மூழ்கி மூழ்கி இன்பத் தமிழ் முத்துக்களை எத்தனை எத்தனைச் சுவைப் பண்டமாகப் படைத்துத் தந்திருக்கிறார்கள்!

மேனாட்டு அறிஞர்தம் கருத்துக்களையெல்லாம்—சொல்லழகுகளை எல்லாம் எவ்வளவு லாவகமாக நமக்கு எடுத்துக் காட்டி இருக்கிறார்கள்!

'தம்பி!' என்று அழைக்கும் அந்தக் கனிரென்ற—கனிவான குரலை இனி நாம் நேருக்கு நேர் காண முடியாது!

> "பிரச்னைகளை விளக்கிட, ஐயப்பாடுகளைப் போக்கிட, அச்சம் துடைத்திட, "தம்பிக்குக் கடிதம்" மிக நேர்த்தியான முறையில் பயன்பட்டு வந்தது."

என்று பேரறிஞரே குறிப்பிட்டுக் கூறுகிறார்கள் என்றால், அந்தப் பயனைத் துய்த்திடும் நாம் எந்த அளவுக்குப் பயன்பட்டு—பண்பட்டு வந்திருக்கிறோம்!

நமக்கெழுகின்ற ஐயப்பாடுகளை இனி யார்போக்கப் போகிறார்கள்? கப்பிக்கொண்டிருக்கிற அச்சத்தை யார் நீக்கப்போகிறார்கள்! பிரச்னைகளைப் பற்றிய தெள்ளிய விளக்கம் எங்கிருந்து கிடைக்கப்போகிறது?

அண்ணனுக்கு நினைவுநாள் கொண்டாடிவிட்டோம்! குலைந்த நிலை சரிப்பட்டுப் போயிற்று?

முடியாது நண்பா! இனி இன்னொருவரால் அந்த இடத்தை நிரப்ப எந்தக் காலத்திலும் முடியாது.

தொடக்கத்தில் எடுத்துக்காட்டி இருப்பதுபோன்ற இந்தியப் பிரச்னைகளை அண்ணா அவர்கள் அலசிக் காட்டும்போது ஏற்படுகின்ற ஒரு தெளிவு—கிடைக்கின்ற ஒரு விளக்கம் நமக்கு இனி எங்கிருந்து கிடைக்கப்போகிறது.

செவியுணவு கொண்டு செம்மாந்திருந்த நாட்கள் இனி மீளுமா?

வயிற்றுணவின் மாக்களாகவே நாம் இருக்க வேண்டுமென்றல்லவா நண்பா! நம்மை ஏக்கத்திலாழ்த்திவிட்டுப் போய்விட்டார்!

நண்பா! பேரறிஞர் அண்ணாவை கழகத் தலைவர் என்று மட்டுமா நாம் நேசித்தோம்! உடன் பிறவா அண்ணனாகவல்லவா அவர் நம்மோடிருந்தார்! தம்பி! தம்பி! என்று நொடிக்கு நூறுமுறை அழைத்து கவலை குடையும் நம் நிலையை மாற்றும் மாமருந்தாக அல்லவா அவர் நம்மோடிருந்தார்.

உண்மையை ஒளிக்காமல் சொல்ல வேண்டுமானால் ஒரு எழுத்தாளன், கூரிய எழுத்துக்களைப் படைக்கும் பேனா உடைந்துபோய்விட்டது!

பேனாதானே! வேறென்று! புதியதாக! விலை அதிகம் கொடுத்தால்! கிடைக்காத பொருளல்லவே!

உண்மைதான் நண்பா! பேனா என்றால் கிடைக்காததல்ல! நூறு ரூபாய்க்கும் பேனா வாங்கலாம்! நூறு பைசாவுக்கும் பேனா வாங்கலாம்!

ஆனால் எழுத்தாளனுக்குத்தானே தெரியும் உடைந்த பேனாவின் அருமை! அந்த பேனாவைக் கொண்டு படைத்தளித்த படைப்புக்களின் சிறப்புக்கள் அவனுக்குத்தானே தெரியும்!

பேரறிஞர் அண்ணா படைத்தளித்த படைப்புக்களைப் போல் இன்னொருவரால் படைத்துத் தந்துவிட முடியுமா?

> இலக்கிய விமர்சனமாயினும், அரசியல் விளக்கங்களானாலும், கதையானாலும் நாடகமானாலும் அண்ணாவின் பாணி அண்ணாவுக்கே உரியதல்லவா!

அண்ணாவைப் பின்பற்றி எழுதித்தோற்றோர் இந்த நாட்டில் ஏராளம்! வென்றோர்?......

வினாக்குறி யுடனேயே நின்று விடுகிறது பதில்!

> "உணர்ச்சி முடங்கிவிடும்போது செயலும் முடங்கிப்போகிறது; அறிவு முடங்கிப் போகும்போது ஆற்றலும் முடங்கிப் போகிறது"

என்று யாரோ சொல்லிவைத்துப் போயிருக்கிறார்கள்!

அறிவும், உணர்ச்சியும், செயலாற்றலும் முடங்கி விடுகிறபோது, எந்த ஒன்றைத்தான் ஒழுங்காக எடுத்துக்காட்ட முடிகிறது.

தோல்வியடைகிறோம்! துவண்டுபோகிறோம்!

அதனாலேயே நண்பா, "காஞ்சி" இதழின் ஆசிரியரும் பேரறிஞர் அண்ணா அவர்களது இரண்டாவது குமாரருமாகிய திரு. இளங்கோவன் அவர்கள்—

> பேரறிஞர் அண்ணா அவர்கள் இதுவரையில் எழுதியுள்ள கதைகள், கட்டுரைகள் முதலானவைகளை — பிரசுரிக்கப்பட்டது — படாதது முதலியன அனைத்தையும் இனி தொடர்ந்து "காஞ்சி" மூலம் மீண்டும் படைக்க ஒப்புதல் தந்து இருக்கிறார்கள்!

'நீதிதேவன் மயக்கம்', 'சந்திர மோகன்', 'வேலைக்

காரி', 'கம்பரசம்', 'ரோமாபுரி ராணிகள்' போன்ற கருத்துக் கருவூலங்கள்கூட இனி 'காஞ்சி' மூலம் உனக்கும் எனக்கும்கூட படிக்கக் கிடைக்கப் போகிறது! பயன் தரத்தக்க 'தம்பிக்கு' பகுதிகள்கூட இடம் பெறக்கூடும்!

பேரறிஞர் அண்ணாவின் இழப்பை சரியான அளவுக்கு ஈடுகட்டக்கூடிய முடிவு அது. ஆசிரியர் தம் கடமையை நிறைவேற்ற ஒப்புக்கொண்டு விட்டார்.

உன் கடமை இனி என்ன?

"காஞ்சி"—இனி உன்னுடையது. உன்னுடைய நண்பர்களுடையது. அத்தனைப் பேருடைய குடும்பத்துக்கும் சொந்தமானது.

தமிழகத்தின் பட்டி தொட்டியெங்கும் அதனைப் பரப்பவேண்டிய கடமை இனி நம் அனைவர்க்கும் உரியது!

அதனாலேயே அண்ணா அவர்களது எழுத்துக்களுக்கு மறு பதிப்புத் தர முடிவெடுக்கப் பட்டுள்ளது.

நம்மை வளர்த்து ஆளாக்கிய பேரறிஞர் அண்ணாவுக்கு நாம் செய்யும் கைம்மாறு அது ஒன்றுதான்!

சந்தாக்கள் குவிய வேண்டும்! 'காஞ்சி' இதழ் கிடைக்காத குக்கிராமம்கூட இல்லை என்ற நிலை உருவாக வேண்டும்! விற்பனையாளர்கள் பெருகிட வேண்டும்.

அப்போதுதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய பாதையில் நாம் சரியாக நடைபோட சரியான வழி கிடைத்ததாக இருக்கும்!

அண்ணாவின் கருத்துக்கள் — அவர் காட்டிய பாதை என்று பொருள். அதனை நாம் பின் பற்றுவது, கருத்தினைப் புரிந்து ஒழுகுவது என்று பொருள்.

அடுத்த கிழமை முதலே 'காஞ்சி' தன் கடமையைச் செய்யவிருக்கிறது.

நண்பா! நீயும் உன் நண்பர் குழாமும் உங்களது கடமையைச் செய்ய இன்றே முனையவேண்டும்!

அடுத்த கிழமை முதல், ஒரு இதழைத் தவறவிட்டால்கூட, பேரறிஞர் அவர்களது கருத்தில் ஒன்றை இழந்துவிட்டதாகப் பொருள்.

எனவே, நண்பா, இப்போதைய துணைக்கண்டத்து அரசியல் நிலையை அறிய முடியும் அதே வேளையிலேயே அன்றைய நிலையையும் ஒப்பிட்டுப்பார்த்து வருவது—அதுவும் பேரறிஞர் அண்ணா அவர்களது கருத்துக்களோடு ஒப்பிட்டுப்பார்த்து வருவது என்பது எவ்வளவு பயனுடைய செயல் தெரியுமா?

தெரியும் என்பது மட்டும் பதிலாக்கிவிருக்கக் கூடாது! அது செயல்படும்போதுதான் கடமை உணர்வில் நாம் எந்த அளவு செயல்பட்டிருக்கிறோம் என்பதைப் புரிந்துகொள்ளமுடியும். தயார்தானே! நண்பா!

அன்புள்ள,

திருவாரூர் முத்துராமன்

மனிதத் தன்மையில் மட்டும்தான்!



என் தம்பிகள் தங்கைகள் நாட்டின் நல்லோர் அனைவருமே என்னை நலந்தானா? என்று கேட்பது போலவே தோன்றுகிறது. கடந்த ஓராண்டாகவே, இந்தக் கேள்வி கிளம்பியபடி இருந்தது; அமெரிக்கா சென்று அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டிய அளவுக்கு உடல் நலம் பாழ்பட்டது. ஆனால் அதனால் ஏற்பட்ட கவலையை நான் உதறித் தள்ளும் விதமான அன்பும் கனிவும் நாடு முழுவதிலுமிருந்து கிடைத்தது. அரசியலில் நம்மோடு மாறுபட்டிருப்பவர்களிலே பலரும் கனிவு காட்டிடக் கண்டேன் — மனிதத் தன்மை அடியோடு மடிந்துவிடவில்லை என்பதனை உணர்ந்தேன். தம்பி! அந்த மனிதத் தன்மையிலேதான் முழுக்க முழுக்க நம்பிக்கை கொண்டிருக்கிறேன். மனிதத் தன்மை திகழ்ந்திடச் செய்வதைக் காட்டிலும் மகத்தான வேறோர் வெற்றி இல்லை என்றே கருதுகிறேன். அரசுகள் அமைவதே, இந்த மனிதத் தன்மையின் மேம்பாட்டினை வளர்த்திடத்தான் என்று கருதுகிறேன். என்னால் எந்தப் பிரச்சினையையும் மனிதத் தன்மை கலந்ததாக மட்டுமே கொள்ள முடிகிறது. அதனால் கொடுமை நேரிட்டு விடும்போது குமுறிப் போகிறேன்.

—'காஞ்சி' பொங்கல் மலரில்.

Kamala
Sugar Mills Ltd.,

(GLUCOSE FACTORY)

Amaravathi Nagar (P. O.)
Udumalpet S. Rly.,
Coimbatore Dt.

Liquid Glucose "Grade-A"

Now we have started production of our New Glucose "Grade-A" This: Glucose is purified by "Demineraliser" which gives good colour and avoids stickness.

So it will be a great advantage to the consumers of glucose liquid for the manufacture of confectionary Sweets, Biscuits, Syrups Aerated waters and Pharmaceuticals.

Our Distributors for Madras, South Arcot North Arcot and Chingleput Districts:

P. Singaravelu,
310, Wall Tax Road, Madras-3

OUR SALES BRANCHES AT:

MADURAI: 28-B, ELUKADAL AGRAHARAM.
TRICHY: 9, CHINNAKKADAI STREET.
KUMBAKONAM: 84, J. P. KOIL EAST STREET.

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-8
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.